# அக்டோபர் – 21 – சனி

## அவரே நம் கடவுளாகிய ஆண்டவர்! திபா. 105:7

**முதல் வாசகம் : உரோமையர் 4 : 13, 16 - 18**

சகோதர சகோதரிகளே உலகமே அவருக்கு உரிமைச் சொத்தாகும் என்னும் வாக்குறுதி ஆபிரகாமுக்கோ அவருடைய வழிமரபினர்களுக்கோ திருச்சட்டத்தைக் கடைப்பிடித்ததால் கிடைக்கவில்லை. நம்பிக்கை கொண்டு கடவுளுக்கு ஏற்புடையவர் ஆனதால்தான் அவ்வாக்குறுதி கிடைத்தது. ஆகவே கடவுளின் அருள்செயலால் நம்பிக்கை வாக்குறுதியின் அடிப்படையாயிற்று. இவ்வாறு வாக்குறுதி ஆபிரகாமின் வழிவந்தவர்கள் எல்லாருக்கும்-திருச்சட்டத்திற்கு உட்பட்டோருக்கு மட்டுமல்ல, அவரைப்போலக் கடவுள்மீது நம்பிக்கை கொண்டோருக்கும்-உரியது என்பது உறுதியாயிற்று. ஆபிரகாம் நம் அனைவருக்கும் தந்தை. ஏனெனில் ”எண்ணற்ற மக்களினங்களுக்கு உம்மை நான் தந்தையாக்கு கிறேன்” என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆம், இறந்தவர்களை வாழ்விப்பவரும் இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அவர் முன்னிலையில் ஆபிரகாம் நம் தந்தையானார். ”உன் வழிமரபினர் எண்ணற்றவராய் இருப்பர்” என்றும் அவருக்குச் சொல்லப்பட்டது. இக்கூற்று நிறைவேறும் என்னும் எதிர்நோக்குக்கு இடம் இல்லாதது போல் தோன்றினும், அவர் எதிர்நோக்கினார் தயங்காமல் நம்பினார். ஆகவே அவர் பல மக்களினங்களுக்குத் தந்தையானார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும்
நினைவில் கொள்வார்

**நற்செய்தி : லூக்கா 12 : 8 - 12**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: ”நான் உங்களுக்குச் சொல்கிறேன் மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை மானிடமகனும் கடவுளின் தூதர் முன்னிலையில் ஏற்றுக் கொள்வார்.மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் கடவுளின் தூதர் முன்னிலையிலும் மறுதலிக்கப்படுவார்.மானிடமகனுக்கு எதிராய் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டவரும் மன்னிக்கப்படுவார். ஆனால் தூய ஆவியாரைப் பழித்துரைப்பவர் மன்னிப்புப் பெறமாட்டார்.தொழுகைக் கூடங்களுக்கும் ஆட்சியாளர், அதிகாரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்போது எப்படிப் பதிலளிப்பது, என்ன பதில் அளிப்பது, என்ன பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம்.ஏனெனில் நீங்கள் பேசவேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்“ என்றார்.

**தியானம்:** நம்பிக்கை என்பது மனித வாழ்விற்கு முக்கியமானதொன்றே. அந்நம்பிக்கையில் நாங்கள் உறுதிகொண்டவர்களாக வாழ்வோமேயானால், அன்று ஆபிரகாமிற்கு கொடுத்த ஆசீர்வாதங்களினால் நிரப்பி எங்களையும் அவர் வழிநடத்துவார். இன்றைய திருப்பாடலிலும் கூட ஆபிரகாம், ஈசாக், யாக்கோபிற்கு செய்த உடன்படிக்கையை அவர் நினைவிற்கொண்டு அவற்றை நிறைவேற்றுகிறார். அவர் செயலும், சொல்லும் ஒவ்வொன்றும் உண்மையானது, நேர்மையானதும், உறுதியானதமாகும். ஆனால் நாங்கள் அவர்மேல் கொண்டுள்ள நம்பிக்கையானது உயிரோட்டமற்ற, தளர்வுள்ள, மரணித்ததுமாகும். எங்கள் விசுவாசம். நம்பிக்கை என்பது திருப்பலிக்கு செல்வதோ, வழிாடுகளில் பங்குபற்றுவதோ, செபமாலை சொல்வதில் மட்டுமே நின்றுவிடுகின்றது. மாறாக இறைவன்மேல் உறுதியான நம்பிக்கை கொண்டு வாழ்வோமேயானால் எமக்கு ஏற்படும் ஏமாற்றங்கள், தோல்விகள், தடுமாற்றங்கள் யாவும் தூசிக்கு சமமானதாகும். அன்று ஆபிரகாம் உலகத்தையே உரிமையாக்கிக் கொண்டது கட்டளைகளையும், நியமங்களையும் கடைப்பிடித்ததால் மட்டுமல்ல மாறாக அவர்மேல் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையால்தான். (உரோ. 4:13). அதேபோன்று நாங்களும் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ வேண்டுமானால் “தந்தையிடமிருந்து துணையாளர் வருவார்” என்ற இயேசுவின் இறைவார்த்தைக் கிணங்க அவர் வருகைக்காக காத்திருந்து அவர்வழிநடக்க எங்களை தயார்படுத்துவோம்.